பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

13 04 2024 **SATURDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் நலன் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் காங்கிரஸ் கட்சி எதிர்ப்பதாக பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பிஜேபி தலைமையிலான மத்திய அரசு புலனாய்வு அமைப்புகளை தவறாக பயன்படுத்தி வருவதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் வீடுகளில் இருந்தே வாக்களிக்கும் வசதியை உறுதி செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

4. நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு, 648 புள்ளி ஐந்து ஆறு பில்லியன் டாலரை எட்டி இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

5. ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் கேரள அணி 3-1 என்ற கோல்கணக்கில் ஹைதராபாத் அணியை வென்றது.

>>>>><<<<<

நாட்டின் நலன் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் காங்கிரஸ் கட்சி எதிர்ப்பதாக பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ராஜஸ்தானில் நேற்று தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட அவர், மொழி, பிராந்தியம் மற்றும் சாதி அடிப்படையில் நாட்டை பிளவுபடுத்த காங்கிரஸ் விரும்புவதாக அவர் குற்றம் சாட்டினார்.

தேச விரோத செயல்களுக்கு அக்கட்சி ஆதரவளிப்பதாகவும் அவர் தெரிவித்தார். காங்கிரஸ் மற்றும் ஐஎன்டிஐஏ கூட்டணிக் கட்சிகளின் தேர்தல் அறிக்கை குறித்தும் அவர் விமர்சித்தார்.

நாட்டில் அணு ஆயுதங்களை அழிக்க வேண்டும் என்று எதிர்க் கட்சிக் கூட்டணியில் உள்ள ஒரு கட்சி கூறியுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்தியாவை வலிமையற்ற நாடாக மாற்ற எதிர்க்கட்சிகள் விரும்புவதாக அவர் குற்றம் சாட்டினார்.

ராஜஸ்தான் மாநிலத்தைப் பொறுத்தவரை தண்ணீர் பிரச்சினையை காங்கிரஸ் தீர்க்கவில்லை என்றும் பிஜேபி அரசின் ஜல் ஜீவன் திட்டத்திலும் கூட மாநிலத்தின் முந்தைய காங்கிரஸ் ஊழலில் ஈடுபட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எல்லையோர கிராமங்கள் மற்றும் மாவட்டங்களை காங்கிரஸ் அரசு புறக்கணித்ததாகக் கூறிய திரு நரேந்திர மோடி, தற்போது எல்லைப் பகுதி கிராமங்களில் வளர்ச்சிப் பணிகள் அதிக அளவில் மேற்கொள்ளப்படுவதாகக் கூறினார்.

>>>>><<<<<

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு புலனாய்வு அமைப்புகளை தவறாக பயன்படுத்தி வருவதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழகத்தின் கோவையில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தல் சித்தாந்த அடிப்படையிலான தேர்தல் என்றார்.

ஊழல் ஒழிப்பு தொடர்பாக பிஜேபி அதிகம் பேசுவதாகவும், ஆனால் தேர்தல் பத்திரம் விவகாரத்தில் அக்கட்சி பெரிய அளவில் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பண மதிப்பிழப்பு, ஜிஎஸ்டி மற்றும் வேலைவாய்ப்பின்மை காரணமாக நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

**INDI** கூட்டணி ஆட்சிக்கு வந்தால் 30 லட்சம் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் என்று திரு. ராகுல் காந்தி கூறினார்.

**>>>>><<<<<**

மாற்றுத் திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் வீடுகளில் இருந்தே வாக்களிக்கும் வசதியை உறுதி செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

முதல்கட்ட வாக்குப்பதிவில் இந்த வாக்காளர்கள் வாக்களிக்கும் நடைமுறை நிறைவடைந்துள்ளது.

இந்நிலையில், கர்நாடகாவில் இரண்டாம் கட்ட தேர்தலில் மாற்றுத்திறனாளிகளும், 85 வயதுக்கு மேற்பட்டோரும் வாக்களிப்பது இன்று தொடங்குகிறது.

இந்த நடைமுறை வரும் 18ஆம் தேதி வரை நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தேர்தல் தொடர்பான அதிகாரிகளும், பாதுகாப்புப் படையினரும் உரிய நடைமுறைகளுடன் சம்பந்தப்பட்ட வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று வாக்குப்பதிவு நடைமுறையை மேற்கொள்வார்கள் என்று அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

குஜராத்தில் தேர்தல் ஏற்பாடுகள் தீவிரம் அடைந்துள்ளது.

அம்மாநிலத்தில் உள்ள 26 மக்களவை தொகுதிகளுக்கான தேர்தலும், 5 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலும் மே 7-ம் தேதி மூன்றாவது கட்ட வாக்குப் பதிவின்போது நடைபெறுகிறது.

இந்த தொகுதிகளுக்கான வேட்பு மனு தாக்கல் நேற்று தொடங்கியது.

மாநிலத்தில் தேர்தல் செலவின கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்காக 756 பறக்கும் படைகள் செயல்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மாநிலத்தில், இதுவரை 87 கோடி ரூபாய் மதிப்பில் ரொக்கம் மற்றும் பல்வேறு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு பி.பாரதி தெரிவித்தார்.

மாற்றுத் திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்டோர் வாக்களிக்க 12 டி படிவங்கள் மற்றும் தேர்தல் பணியில் உள்ள ஊழியர்களுக்கு தபால் வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

அருணாச்சல பிரதேசத்தில் மக்களவை மற்றும் சட்டப் பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்படுவதாக அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு பவன் குமார் சைன் கூறியுள்ளார்.

இட்டா நகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் அமைதியான மற்றும் நியாயமான முறையில் தேர்தலை நடத்த அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதாகக் கூறினார்.

கூடுதலாக 10 கம்பெனி மத்திய படைகள் அடுத்த வாரத்திற்கும் மாநிலத்தில் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அருணாச்சலப் பிரதேசத்தில் ஏற்கெனவே 70 கம்பெனி மத்திய படைகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

பீகாரில், மக்களவைத் முதல் கட்ட வாக்குப் பதிவு நடைபெறும் தொகுதிகளில் பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நவாடாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய ஐக்கிய ஜனதா தள தலைவர் திரு நிதிஷ் குமார், ராஷ்ட்ரிய ஜனதா தளம் மற்றும் காங்கிரஸ் கட்சிகள் ஊழல் மற்றும் குடும்ப ஆட்சியில் தான் கவனம் செலுத்துவதாகக் குற்றம் சாட்டினார்.

கயா மற்றும் ஜமுய் நாடாளுமன்றத் தொகுதிகளில் ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் திரு தேஜஸ்வி யாதவ் பிரசாரம் மேற்கொண்டார். பிஜேபி ஆட்சியில் நாட்டில் வேலையின்மை மற்றும் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

>>>>><<<<<

நாடு முழுவதும் முதல் முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்திலும் இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்முறை வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிப்பது தங்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளிப்பதாக தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - இளம் வாக்காளர்கள்) – 27 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

இந்தியா, உலகின் ஆன்மிக மையமாக திகழ்வதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், இந்தியாவின் கலாச்சாரம் ஐயாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்தது என்றார்.

காலத்தால் அழியாத பாரம்பரிய நடைமுறைகளை கொண்டுள்ளதாகவும் இதனை பாதுகாக்க வேண்டும் என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு, 648 புள்ளி ஐந்து ஆறு பில்லியன் டாலரை எட்டியுள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

கடந்த ஏப்ரல் 5ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் இரண்டு புள்ளி ஒன்பது எட்டு பில்லியன் டாலர் அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இல்லாத அளவு தற்போது அந்நியச் செலாவணி கையிருப்பு உயர்ந்துள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

>>>>><<<<<

ஹரியானா மாநிலத்தில் பள்ளிப் பேருந்துகளை ஆய்வு செய்ய அம்மாநில தலைமைச் செயலாளர் திரு டி.வி.எஸ்.என்.பிரசாத் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன் மகேந்திரகா் மாவட்டத்தில் பள்ளிப் பேருந்து விபத்துக்குள்ளாகி 6 மாணவர்கள் உயிரிழந்த நிலையில், இது தொடர்பான கூட்டத்திற்கு அவர் தலைமை வகித்தார்.

போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் பேசிய அவர், அடுத்த 10 நாட்களுக்குள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள அனைத்து பள்ளி பேருந்துகளையும் ஆய்வு செய்து அவற்றின் தரத்தை சரிபார்க்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

தகுதியற்ற பள்ளி பேருந்துகளைத் தடை செய்வதுடன், நன்கு பயிற்சி பெற்ற ஓட்டுநர்கள் பணியமர்த்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

இந்தியா–அமெரிக்கா ராணுவ நிர்வாக நிலைக் குழுவின் 27 வது கூட்டம் அமெரிக்காவின் ஹவாயில் நடைபெற்றது.

அதிகரித்து வரும் அச்சுறுத்தல்கள் மற்றும் பல்வேறு சவால்களை எதிர்கொள்வது குறித்து இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தின்போது அமெரிக்க ராணுவம் மற்றும் கடற்படை தளபதிகளுடன் ராணுவ துணை தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தருண் குமார் ஐச் தலைமையிலான இந்திய குழு பயனுள்ள ஆலோசனைகளை மேற்கொண்டதாக ராணுவம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

மகாராஷ்டிரா மற்றும் மத்திய பிரதேசத்தின் சில பகுதிகளுக்கு மழை மற்றும் காற்று தொடர்பான மஞ்சள் எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

அடுத்த 3 நாட்களுக்கு மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் மத்திய மகாராஷ்டிராவின் சில பகுதிகளில் இடி, மின்னல் மற்றும் மணிக்கு 40 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

அடுத்த 3 நாட்களில் தமிழகம், தெலங்கானா, கேரளா, கர்நாடகா மற்றும் புதுச்சேரியில் சில இடங்களில் லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மேற்கு பகுதிகளில் சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரையிலும், கிழக்குப் பகுதிகளில் சில இடங்களில் 3 முதல் 5 டிகிரி செல்சியஸ் வரையிலும் குறையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் கேரள அணி - ஹைதராபாத் அணியை வென்றது.

ஹைதாராபாதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கேரளா 3-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

குவஹாத்தியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி – ஒடிசா அணியை எதிர்கொள்கிறது.

**>>>>>END<<<<<**